மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற கேள்விகளைத் தனிக் கேள்விகளாகக் கேட்டால், ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு, அனைத்து ஆலயங்களிலும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உறுதிபூண்டிருக்கின்றது. வெகு விரைவில் உறுப்பினரது கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

68—

மீன்பிடித் துறைமுகம்

***1368—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இராமன்துறைக்கும், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடையில், தாமிரபரணி நதி கடலில் கலக்கும் இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக 200 இலட்சம் ரூபாய் முதல் தவணையாகவும், 72.75 இலட்சம் ரூபாய் நில ஆர்ஜிதம் செய்வதற்காகவும் அரசு ஒதுக்கியிருப்பதாக மானியக் கோரிக்கையின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏற்கெனவே

2006 ஆகஸ்ட் 22]

அரசுக்கு நன்றி தெரிவித்திருந்தாலும், மீண்டும் ஒரு முறைகூட நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நில ஆர்ஜிதப் பணி முடிவடைந்ததா? இந்தத் துறைமுகப் பணி எப்போது தொடங்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் எதுவுமில்லை. மாறாக, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தேங்காய்ப்பட்டினம் கிராமத்தில் சுமார் 700 மீன்பிடி விசைப் படகுகள் தங்கித் தொழில் புரிந்திட ஏதுவாக, ரூ.30.55 கோடி செலவில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க கடந்த டிசம்பர் மாதம், 2005—ல் மாநில அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினைத் தனியார்களிடமிருந்து கையகப்படுத்தும்பொருட்டு அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.72.75 இலட்சம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கு நில ஆர்ஜிதம் செய்யும்பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. தனியாருக்குச் சொந்தமான நிலங்களை ஆர்ஜிதம் செய்திடவும் மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமான கடல் புறம்போக்கு நிலத்தினை மீன்வளத் துறைக்கு மாற்றம் செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கு மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மத்திய விவசாய அமைச்சகத்திடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை கிடைக்கப்பெற்றதும், ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடற்கரைக் கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல், தோமையார்புரம், இடிந்தகரை, கூத்தங்குளி, உவரி, கூட்டப்பனை, கூடுதாளை ஆகிய பகுதிகளில் தூண்டில் பாலம் அல்லது Mini Fishing Harbour—மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்மூலம் கோரிக்கை வைத்ததன் பயனாக, பொதுப் பணித் துறைமூலம் கட்டுவதாக இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு

மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி தாராளமாக இருக்கின்றது. அந்த நிதியைக் கொடுத்து, Mini Fishing Harbour,--தூண்டில் பாலம் கட்டித் தர ஏற்பாடு செய்வீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினை, நம்முடைய மாண்புமிகு முதல்வருடன் கலந்து பேசி ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

69—

மீன்பிடித் துறைமுகம்

***1479—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கத் திட்டம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தினை இரண்டாம் கட்டமாக விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீனவர் கிராமத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றார்கள். பழையாற்றில் 250 விசைப் படகுகள் உள்ளன. அது மட்டுமல்லாமல், பூம்புகார், திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, தொடுவாய் ஆகிய கிராமங்களிலிருந்து 100 விசைப் படகுகளைப் பழையாற்றிலுள்ள தங்குதளத்தில்தான் கட்டவேண்டும். முதல் தங்குதளத்தில் குறைந்தபட்சம் 30 விசைப் படகுகள் மட்டுமே